DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 182/2018 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 1 |
| | |
| Name | ஜெயபால் |
| Father / Husband Name | ராஜு |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 22nd August 2022.

------------------------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை:-

1) நான் சிவகங்கை சிவாஜி தெருவில் குடியிருந்து வருகின்றேன். நான் தற்சமயம் ஒக்கூரில் உள்ள டாஸ்மாக் கடையில் சேல்ஸ்மேனாக வேலை செய்து வருகின்றேன். நான் ரோஸ்நகரில் உள்ள கடை எண். 7555 பணிபுரிந்த போது கடந்த 04.06.2018ம் தேதி டாஸ்மாக் கடையில் வேலை முடித்து ரூ. 60,000/- பணத்துடன் ரயில்வே மேம்பாலத்தில் இருசக்கர வாகனத்தில் வந்தேன் என்னுடன் கடையில் வேலை பார்த்த நாகராஜன், பழனி, பாண்டி ஆகியோர் அவரவர் இருசக்கர வாகனத்தில் எனது பின்னால் வந்து கொண்டிருந்தார்கள்.

2) நான் இரயில்வே மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்த போது அருகில் இருசக்கரவாகனத்தில் மூன்று பேர் அமர்ந்து கொண்டு வந்தவர்கள் என் அருகில் வந்த போது துணியில் இருந்து ஏதோ பொடியை என் முகத்தில் அடித்தார்கள் எனக்கு கண் எரிச்சல் ஏற்பட்டு கண் தெரியாமல் கத்தினேன். நான் சத்தம் போட்டவுடன் என் பின்னால் வந்த என்னுடன் வேலை பார்த்த மூவரும் சத்தம் போட்டு கத்தினார்கள். என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்தார்கள்.

3) இது சம்பந்தமாக நான் போலிசில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1) நான் அரசு ஒப்பந்த ஊழியராக டாஸ்மாக்கில் வேலை பார்க்கிறேன் என்றால் சரிதான். நான் M.A., படித்துள்ளேன். 04.06.2018 அன்று இரவு 10.00 - 10.15 மணியளவில் சம்பவம் நடந்தது. சம்பவம் நடந்த இடமான மேம்பாலத்தில் மின் விளக்குகள் நிறைய இருந்தது என்றால் சம்பவம் நடந்த இடத்தில் மின் விளக்குகள் இல்லாமல் வெளிச்சம் இல்லாமல் இருந்தது. மேம்பாலம் ஆள்நடமாட்டம் உள்ள பகுதி என்றால் வேறு யாரும் அந்த சமயத்தில் இல்லை நானும், என்னுடன் வேலை செய்தவர்கள் மட்டும் தான் வந்து கொண்டிருந்தோம்.

2) என்னுடன் வேலை செய்தவர்கள் எவ்வளவு தூரத்தில் வந்து கொண்டிருந்தார்கள் என்றால் எவ்வளவு தூரம் என்று தெரியவில்லை நான் கத்தியவுடன் வந்த விட்டார்கள். என் முகத்தில் எந்த பொடியை அடித்தார்கள் என்றால் எந்த பொடி தெரியவில்லை ஆனால் கண் எரிச்சலாக இருந்தது. இது சம்பந்தமாக காவல் துறையில் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் அன்றைய தினமே புகார் கொடுத்தேன் நேரம் ஞாபகமில்லை. போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் மறுநாள் காலையில் விசாரித்தார்கள்.

3) என்னிடம் வாக்குமூலம் எதுவும் வாங்கினார்களா என்றால் இல்லை. இது சம்பந்தமாக மருத்துவமனைக்கு சிகிச்சை சென்றேனா என்றால் ஆமாம். எத்தனை நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன் என்றால் வெளிநோயாளியாக மருத்துவம் பார்த்துவிட்டு உடனே வந்துவிட்டேன். என்னிடம் காட்டப்படுவது நான் காவல் நியைலத்தில் கொடுத்த புகார் தானா என்றால் சரிதான். அந்த புகார் நான் எழுதவில்லை என்றால் ஆமாம் கண் எரிச்சல் இருந்ததால் நான் எழுதவில்லை. அந்த புகாரை யார் எழுதினார்கள் என்று தெரியவில்லை. என்னுடன் வந்தவர்கள் தான் எழுதினார்கள் பெயர் ஞாபகமில்லை.

4) புகாரை 11.06.2018 தேதியன்று தான் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை புகாரில் தேதி அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுக்கும் போதும், அதற்கு பின்பு ஒரு முறையும் விசாரித்தனர். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் சம்பவம் நடந்த தேதியான

04.06.2018 ம் தேதியன்றே புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியார் என்பதால் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரியை எனக்கு யார் என்று தெரியாது. அவர்கள் வந்த வண்டியை பற்றியும் எனக்கு தெரியாது. காவல் துறையும் எதிரிகளை பற்றி எதுவும் சொன்னார்களா என்றால் இல்லை.

**(ஓம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 22.08.2022**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.